920

உ

வையத்து நூறாண்டு வாழ்ந்த பெரியார்

சுன்னாகம்

# திரு. க. சங்கரப்பிள்ளை

அவர்களின்

# நினைவு மலர்

இராட்சத ௵ தை ௴

1976

NP

உ

வையத்து நூறாண்டு வாழ்ந்த பெரியார்

சுன்னாகம்

# திரு. க. சங்கரப்பிள்ளை

அவர்களின்

# நினைவு மலர்

இராட்சத௵ தை௴

1976

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்



திரு. க. சங்கரப்பிள்ளை அவர்கள்

தோற்றம் :
9 - 6 - 1876

மறைவு :
11 - 1 - 1976



திருமதி சிவகாமசுந்தரி சங்கரப்பிள்ளை

தோற்றம் :
1 – 6 – 1881

மறைவு :
20 – 7 – 1968

வையத்து நூறுண்டு வாழ்ந்த பெரியார்

# திரு. சங்கரப்பிள்ளை அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

திரு. சங்கரப்பிள்ளை சுன்னுகம் அப்பச்சிப் பிள்ளை கந்தனுன கனகராயருக்கும், புன்னுலைக் கட்டுவன் கணபதிப்பிள்ளை செல்லப்பிள்ளைக்கும் ஏகபுத்திரனுக 1876ஆம் ஆண்டு வைகாசி மாதம் திருவோண நட்சத்திரத்தில் (9-6-1876) தோன்றினுர். இவருடைய தாயார் புன்னுலைக்கட்டுவன் அகிலேச உடையாரின் சகோதரி என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் தமது கல்வியை மல்லாகம் ஆங்கில வித்தியாசாலையிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். 1897ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்துக்கு விசயம் செய்தபோது அவர்களைத் தரிசிக்கும் பேறு பெற்ருர்.

பின்னர் கொழும்பு வைத்தியக் கல்லூரியிற் சேர்ந்து சிறிது காலம் கற்ருர். அதன் பின்னர் யாழ்ப்பாணம் அப்போதிக்கரிக் கம்பனியிலும், காட்டுத்தம்பளையிலும் வேலை பார்த்தார்.

தமது 25ஆம் வயதில் தெல்லிப்பழை காசிநாதர் அம்பிகைபாகருக்கும், சுன்னுகம் முதலியார் தாமோதரம்பிள்ளை மகள் சின்னத்தங்கத்துக்கும்

ஏக புத்திரியாகிய சிவகாமசுந்தரியை விவாகஞ் செய்தார். மேற் குறிப்பிடப்பட்ட அம்பிகைபாகர் வட்டுக்கோட்டை செமினரிக்குப் பதிலாகத் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரியில் படித்து நாலு வருடப் பயிற்சிக் காலத்தில் எப்பொழுதும் முதல் மாணவராக இருந்தபடியால் இவருக்கு 1876ஆம் ஆண்டில் ஒரு ஆங்கில அகராதி (Webster's Dictionary) பரிசாக வழங்கப்பட்டது. திரு. சங்கரப்பிள்ளைக்கு இவ் விவாகத்தின் பயனாக சுந்தராம்பாள், மாசிலாமணி என்னுமிரு பெண் பிள்ளைகளும், அம்பிகைபாகன் என்னும் ஆண் பிள்ளையும் தோன்றினர். அக்காலத்தில் தனது மனைவியின் வளவில் ஒரு புதுமனையை அமைத்துக் கொண்டார்.

தமது வளத்தைப் பெருக்கும் பொருட்டு 1911ஆம் ஆண்டு பிற்பகுதியில் மலாய் நாட்டுக்குச் சென்றார். யாழ்ப்பாணத்திலிருந்து மலாய் நாட்டுக்குச் சென்ற முன்னோடிகளில் இவரை ஒருவராகக் கொள்ளலாம்.

மலாய் நாட்டுக்குச் சென்றவர் தமது வைத்திய அறிவைக் கொண்டு முதன் முதலில் பேராக் என்னுமிடத்திலிருந்த ரப்பர் தோட்டத்தில் வேலை பார்த்தார். அங்கு ஏறக்குறைய இரண்டாண்டுகள் கடமையாற்றியபின் அவ்விடத்தை விட்டு கிள்ளானிலுள்ள பற்று அஞ்சூர் ஆஸ்பத்திரியில் (Batu Unjor Hospital, Klang) வேலை பார்க்கத் தொடங்கிய இவர், இவ் விடத்தில் 1916ஆம் ஆண்டு நடைபெற்ற வைத்தியப் பரீட்சையில் (Dressers' Examination) 80 புள்ளிகள் பெற்று

இரண்டாவதாகச் சித்தியெய்தினர். இதன்பின்னர் இளைப்பாறும் வரைக்கும் இவ்விடத்திலேயே கடமையாற்றினர்.

மலாயாவில் கடமையாற்றும்பொழுது இவருடைய குடும்பம் யாழ்ப்பாணத்திலிருந்துவந்தது. காலத்துக்குக் காலம் லீவில் வந்து பிள்ளைகளுக்கு விவாகம் முதலியன சிறப்பாகச் செய்து வைத்தார். மூத்தமகள் சுந்தராம்பாளை இலங்கை வைத்தியத் துறையில் அப்போதிக்கரியாயிருந்த சுன்னுகம் சின்னத்தம்பி இராமலிங்கத்துக்கு விவாகஞ் செய்து வைத்தார். இதன் பயனுக இவர்களுக்கு பத்மாவதி, இராசமணி என்னும் இரு பிள்ளைகள் தோன்றினர். பத்மாவதி இலங்கை அஞ்சல் திணைக்களத்திலே வேலை பார்த்த, சுன்னுகம் விசுவநாதர் மார்க் கண்டுவை விவாகஞ்செய்து இராமலிங்கம் என்னும் மகனைப் பெற்றனர். இராசமணி இலங்கை நெடுஞ் சாலை, நீர்ப்பாசனத் திணைக்களத்தில் எழுது வினைஞராகக் கடமையாற்றும், சுன்னுகம் கதிரித் தம்பி சிவபாதசுந்தரத்தை விவாகஞ்செய்து பாலச்சந்திரன், சாரதாதேவி என்னும் இரு பிள்ளை களைப் பெற்றனர்.

இவரின் இரண்டாவது மகள் மாசிலாமணி மல்லாகம் செனகரத்தினத்தின் மகனும், மலாயா வில் அரசாங்க உத்தியோகத்திலிருந்தவருமான சின்னத்தம்பர் என்பவரை விவாகஞ் செய்தார்.

வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நெடுங்காலம் அதிபராகவிருந்து இளைப்பாறியிருக்கும் இவரின் மகன் அம்பிகைபாகன், மல்லாகம் வழக்கறிஞர்

சுப்பிரமணியம், J. P. மகள் நகுலாம்பிகையை விவாகஞ் செய்தனர். இதன் பயனாக இவர்களுக்கு ஆனந்தகுமாரசுவாமி, பூங்கோதை, பாலசுப்பிர மணியம், செந்தில்செல்வன், ஆனந்தகௌரி முதலியோர் தோன்றினர். கொழும்பு, குடும்ப நலச் சங்கத்தில் கணக்காளராகவிருக்கும் (Finance Manager) ஆனந்தகுமாரசுவாமி சுன்னாகம் சரவணமுத்து அவர்களின் மகள் சரோஜா தேவியை விவாகஞ்செய்து அபிராமி என்னும் ஒரு குழந்தையைப் பெற்றுள்ளனர். பூங்கோதை சுன்னாகம் சரவணமுத்து அவர்களின் மகனும், இலங்கையில் சாட்டேட் அக்கவுண்டனாக (Chartered Accountant) இருந்தவரும், இப் பொழுது ஜாம்பியாவிலிருப்பவருமான சர்வேந் திரனை விவாகஞ் செய்து சரவணபவன், சங்கர குமார் என்னும் இரு பிள்ளைகளைப் பெற்றுள்ளனர். பாலசுப்பிரமணியம் இலங்கைச் சர்வகலாசாலை கொழும்பு வளாகத்தில் ஆராய்ச்சித்துறையிலும், செந்தில்செல்வன் அதே வளாகத்தில் உதவி விரி வுரையாளராகவும் இருக்கின்றனர். ஆனந்த கௌரி சென்னையில் மாணவியாக விருக்கிறார்.

திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் எங்கெங்கு கடமையாற்றினாலும் அங்குள்ள மேலதிகாரிகளி னதும் மக்களினதும் நன்மதிப்பைப் பெற்றிருந் தார். இது இவருக்கு வழங்கப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்களிலிருந்து அறியக் கிடக்கிறது. இவர் நெடுங் காலம் கடமையாற்றிய பற்று அஞ்சூர் ஆஸ்பத்திரியில் பிரதம டாக்டராகவிருந்த யங் (Dr. Ansley Young) இவரிடத்தில் மதிப்பு வைத் திருந்தபடியால் இவருடைய உத்தியோக வாழ்க்கை சந்தோஷமாக நடைபெற்றது.

மலாயாவிலிருந்த காலத்தில் குதிரை வண்டி, கார் முதலிய வாகன வசதிகளுடையவராய், விருந்தோம்பலில் சிறந்து விளங்கினுர். பல சங்கங்களில் அங்கத்தவராகவிருந்து பல்வேறு சமூகத்தவரோடு நெருங்கிப் பழகிப் பிரபல்லியமாக வாழ்ந்தார்.

இலங்கை திரும்பியபின் தமது உற்ருர், உறவினருக்கும், பொதுமக்களுக்கும் சேவை புரிவதில் காலத்தைக் கழித்தார். நூற்ருண்டு வாழ்ந்த போதிலும் கடைசி வரைக்கும் திடகாத்திரத்துடன் வாழ்ந்தார்.

சிலதினங்கள் நோயுற்றிருந்த இவர் உற்ருர், உறவினர், மக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் சூழ்ந்து சிவபுராணம் முதலிய திருமுறைகளை ஓத 11-1-76 இரவு 7–30 மணியளவில் உயிர்நீத்தார்.

❀

மூச்சுக்காற்று அழிவில்லாத வாயுவை அடையட்டும்; பிறகு இந்த உடல் சாம்பலாக முடியட்டும். ஓங்கார ஸ்வரூபியும், ஸங்கல்ப ஸ்வரூபியும் அக்கினி ஸ்வரூபியுமான பகவானே! (என்னை) நினைப்பீர். (என்னுல்) செய்யப்பட்டதை நினைப்பீர். ஸங்கல்ப ஸ்வரூபியும் அக்கினி ஸ்வரூபியுமான பகவானே! (என்னை) நினைப்பீர், (என்னுல்) செய்யப்பட்டதை நினைப்பீர்.

அக்கினியே! (எங்கள் செயலால் உண்டான) செல்வத்தை அனுபவிப்பதற்கு நல்ல மார்க்கத்தில் எங்களை அழைத்துச் செல்வீர், தேவனே! எல்லா எண்ணங்களையும் நீர் அறிவீர். மறைந்திருந்து கெடுக்கும் பாவத்தை நாசம் செய்வீர். நமஸ்கார வசனங்களை வெகுவாய்ச் சமர்ப்பித்து உம்மைப் பூசிக்கிருேம்—ஈசாவாசியம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

# *Testimonials*

**The Bidor Rubber Estate Ltd.,**
*Bidor*, 31 *Dec.*, 1913,
*Perak*, *F. M. S.*

*Mr. K. Sangarappillai was employed at this Estate in charge of the Estate Hospital etc. He has filled that post for a period of one year and nine months, and has during that time performed his duties to my satisfaction. He is leaving of his own accord..*

*Edward Dane*
*Manager*

**Highlands Estate,**
*Klang*, 27*th August*, 1921.

*Bearer Mr. Sangarappillai has been Dresser in charge of the joint Higlands and Batu Unjor Estates Hospital for the last six years.*

*I consider that the Hospital has been very well run and patients carefully looked after with a very small percentage of deaths. I should think that Mr. Sangarappillai has a thorough knowledge of his work and as far as this Estate has been concerned I have always been very pleased with his work.*

*(Signature Illegible)*
*Manager*

## THE CENTENARIAN OF CHUNNAKAM

# AN APPRECIATION

**V. M. Cumaraswamy**
(*Retired District Judge, Mallakam.*)

Three score years and ten is the psalmist's age. But Mr. Kanthanana Kanagarayar Sangarapillai, the doyen of Kappal Valavoo, Chunnakam, achieved a man's dream and lived to celeberate his centenary and passeed away peacefully on 11-1-76

It is given to a few only to lead a healthy life to the last. Mr. Sangarapillai was blessed with a healthy life to the very last. His intellect was as sharp as ever and was the envy of those half his age.

He led a full and contented life. He doted on his only son Mr. Ambikaipakan, Principal Emeritus, Vaidyeswara Vidhiyalaya. He was happy that his son and grand-children were doing well in life and maintaining the family traditions.

Though his devoted wife, the gracious lady, predeceased him a few years ago, he was very well looked after by his eldest daughter and grand daughters. It was due to their care and affection that he was able to live to see his centenary.

I came to know the Grand Old Gentleman in 1931 or so when he returned from Malaysia at the age of 55. He brought his Citroen car. He was a very fair and handsome person, be-spectacled and dressed in silk clothes, sporting a green English umbrella, looking much

younger than his age and was the cynosure of all people in Valigamam North.

As I was a college mate of his son, he always extended to me a full welcome to his house. He was fully informed on men and matters and it was a treat to listen to him.

About three months before he passed away, I called on him. He had a long chat and showered his blessings on me in full measure.

No more his fond welcome. No more his lively and stimulating conversation. An epoch has ended.

May his soul rest in Peace is my prayer to Lord Ishwara.

OM Shanthi! Shanthi! Shanthi!

Of all teachers, the *Jnana-guru* is acknowledged to be the greatest. Unlike the *Vidya-guru*, who imparts knowledge on any given subject; unlike the *Samaya-guru*, who imparts knowledge on any given religion, the *Jnana-guru* is concerned with the very foundation of knowledge, with Truth eternal, unchangeable. He is therefore a teacher of teachers, a *guru* in the real sense of the term, and hence called a *Jagat-guru*, or *Loka-guru*, a Preceptor or Light of the world.

— *Sir P. Ramanathan*

# பூரண வாழ்வு வாழ்ந்த பெரியார்

கா. வைரமுத்து, B. A.
(வைத்தீஸ்வர வித்தியாலய முன்னாள் உபஅதிபர்)

கடந்த மார்கழித் திங்கள் 27ஆம் நாள் சிவபத மடைந்த சுன்னாகம் கப்பல் வளவு வாசர் உயர்திரு. கந்தனை கனகராயர் சங்கரப்பிள்ளை அவர்கள் நிறைவாழ்வு வாழ்ந்த ஓர் பெரியாராவர். இற்றைக்கு ஏறக்குறைய நாற்பதாண்டுகளுக்கு முன்னரே அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். தாம் உத்தியோகமா யிருந்த மலாயா தேசத்திலிருந்து வந்த காலம் அது. அங்கிருந்து கொண்டுவந்திருந்த சிற்றன் (Citroen) காரைத் தாமே செலுத்திவரும் காட்சி இப்போதும் என் கண்முன் நிற்கிறது. அக்காலத்தில் அவருடைய உறுதியான உடலமைப்பும் கம்பீரமான தோற்றமும் அவருக்கே ஒரு தனிச் சிறப்பாயிருந்தது. தனது இறுதிக் காலம்வரை தமது ஆற்றல்களை இழவாது ஒரு பூரண வாழ்வு வாழ்ந்த ஒரு பெரியாராகத் திகழ்ந்தார். பழம் பெருங்குடி மக்களி லொருவராகிய அவர் அம்மக்களின் தலையாய பண்பாகிய விருந்தோம்பலுக்கு ஓர் எடுத்துக்காட்டாயிருந்தார். அவருடைய ஏக புதல்வன் அம்பிகைபாகனது நண்பர்கள் எந்நேரத்தில் அங்கு சென்றாலும் விருந்து உபசாரம் நடத்தியே விடுவார். தம்முடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் நல்வாழ்வில் சிரத்தை கொண்டவராயும் அவர்கள் அடைந்த சித்திகளில் பெருமகிழ்வு கொள்ளும் வாய்ப்பும் பெற்றிருந்தார். அவரது மகன் வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் அதிபராய்க் கடமையாற்றி இருபத்தைந்தாண்டு நிறைவுபெற்றபோது நிகழ்ந்த வெள்ளிவிழாப் பாராட்டையும் அவர் சேவையிலிருந்து இளைப்பாறிய போது நடைபெற்ற பிரியாவிடைப் பெருவிழாவையும் கண்ணாரக் கண்டு களிப்புற்ற தந்தையாராவர். தமது நீண்டகால அனுபவத்துடன் தம்மை அணுகிய எவருக்கும் நல்ல புத்திமதி கூறி நல்வாழ்வுக்கு வழிகாட்டியாயிருந்த அவரின் மறைவு பலரை ஆழ்ந்த துயரத்துக்குட்படுத்தியது. வாழ்வாங்கு வாழ்ந்த அப்பெரியாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

# *Messages*

*No. 103/2, Hultsdorf Street,*
*Colombo 12.*
*16th January, 1976.*

*My dear Esteemed Aiyah,*

Please allow me to offer to your goodself and all members of the family, my heartfelt condolences on the passing away of your venerable and dear father. He has gone full of years and honours; he was also very kind to me; and I remember him with gratitude, even as I do in your case.

With respectful regards.

Yours Always,
**S. Sivasubramaniam.**

*Mallakam,*
12-1-76.

*My dear Mr. Ambikaipakan,*

I regret I am unable to be present at the funeral of a standout personality—the personification of sturdy physique and strong mind—your revered father.

Please convey my condolences to your sister and nieces.

Yours sincerely,
**R. N. Sivapiragasam.**

"Punitham"
Urumpirai North,
12-1-1976.

*Dear Mr. Ambikaipakan,*

It is with much regret I pen this letter to you today as I am unable to attend the funeral of your father.

I always think of him because he had been my closest friend for about 17 years in Malaysia. We always met at the club. On his return he passed my house—he sometimes took me in his car. Well when time comes we must leave for our destination. I do not go out as before I am now about 89 years.

My condolence to the family.

Yours sincerely,
**V. Nalliah.**

20, *Police Park Avenue*,
*Havelock Road*,
*Colombo* 5.
14th *January*, 1976.

*My dear Cousin,*

Received your telegram informing me of the death of my uncle on the night of the 11th instant but it was not possible for me to attend the funeral as I had recovered from an attack of virus flu and as my eldest son who had come from Australia was leaving on the 13th Morning to Australia. Uncle had led a useful and full life. He was a person who had no insular views on life and its surroundings. His broad outlook on all matters was appreciated by all of us. Whenever I had an opportunity of calling on him, it was a pleasant time, discussing various matters. My son saw him last a few months ago. He was the last of a generation that is no more. With our regards to all of you.

Yours affectionately,
**A. M. Charawanamuttu.**

திருச்சிற்றம்பலம்

# சைவசமயசாரம்

(நாவலர் எழுதியவைகளிலிருந்து தொகுக்கப்பட்டது)

1. உலகத்தைப் படைத்தல், காத்தல். அழித்தல் என்கிற மூன்று தொழில்களையுஞ் செய்தற்குக் கருத்தா ஒருவர் இருக்கிறார்.

2. அந்தக் கருத்தா சிவபெருமான்,

3. சிவபெருமான் என்றுமுள்ளவர், எங்கும் நிறைந்தவர், என்றுஞ் சுத்தர், எல்லாமறிபவர், எல்லாம் வல்லவர், பெருங்கருணையுடையவர்.

4. சிவபெருமானுக்குத் தேவி அவருடைய சக்தியாகிய திருவருள்.

5. சிவபெருமானொருவரே விக்கினேசுரர், சுப்பிரமணியர் முதலிய பல மூர்த்திகளாகி நின்று அருள் செய்வர்.

6. ஆன்மாக்கள் சிவபெருமானுக்கு என்றும் அடிமைகள்.

7. சிவபெருமானை மனம் வாக்குக் காயம் என்கிற மூன்றினாலும் வழிபடுதல் ஆன்மாக்களுக்குக் கடன்.

8. மனசினாலே செய்யும் வழிபாடுகளாவன சிவபெருமானைத் தியானித்தல், அவருடைய குணங்களைச் சிந்தித்தல் முதலானவைகள்

9. வாக்கினாலே செய்யும் வழிபாடுகளாவன சிவபெருமானுடைய திருநாமங்களை உச்சரித்தல், அவருடைய

பெருமையைப் பேசுதல், அவருடைய சரித்திரங்களைப் படித்தல் முதலானவைகள்,

10. காயத்தினாலே செய்யும் வழிபாடுகளாவன சிவபெருமானுடைய திருமேனியைத் தலையினாலே வணங்குதல், கண்களினாலே தரிசித்தல், கைகளினாலே கும்பிடுதல், பூசித்தல், கால்களினாலே வலம்வருதல் முதலானவைகள்.

11. சிவபெருமானை நோக்கிச் செய்யும் வழிபாடே அசுத்தர்களாகிய ஆன்மாக்களைப் பந்தித்த பாசமாகிய நோய்க்கு மருந்து.

12. வழிபாடாகிய மருந்துக்கு அநுபானமாவது மெய்யன்பு.

13. வழிபாடாகிய மருந்துக்குப் பத்தியங்களாவன உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல், செய்நன்றியறிதல், தாய், தகப்பன், உபாத்தியாயர், குரு முதலாகிய பெரியோர்களை வணங்குதல், வறியவர்களுக்குக் கொடுத்தல் முதலிய புண்ணியங்கள்.

14. வழிபாடாகிய மருந்துக்கு அவபத்தியங்களாவன கொலை, களவு, கள்ளுக்குடித்தல், மாமிசம் புசித்தல், சூதாடல் முதலாய பாவங்கள்.

15. சிவபெருமான் தமக்கு ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்று நிற்கும் இடங்களாவன சிவலிங்கம் முதலிய திருமேனியும் மெய்யடியார்களுடைய திருவேடமும்.

16. சிவபெருமான் தம்மை ஆன்மாக்கள் அறிந்து வழிபட்டு உய்யும்பொருட்டு அருளிச்செய்த முதனூல்கள் வேதம், சிவாகமம் என்கிற இரண்டும்.

17. சிவபெருமானை வழிபடும்பொருட்டு ஆன்மாக்களுக் குக் கிடைத்த கருவி மனித சரீரம்.

18. மனித சரீரத்தைப் பெற்ற ஆன்மாக்களுக்குச் சிவ பெருமானை வழிபடும்பொருட்டு யோக்கியதையை வருவிப்பது சிவதீட்சை.

19. சிவதீட்சை பெற்றுக்கொண்டு வேத சிவாகமப்படியே சிவபெருமானை வழிபடுகிற சமயம் சைவசமயம்.

20. சைவசமயிகள் அவசியமாகத் தரிக்கத்தக்க சிவ சின்னங்களாவன விபூதியும் உருத்திராட்சமும்.

21. சைவசமயிகள் ஆவசியமாகச் செபிக்கத்தக்க சிவமூல மந்திரம் பஞ்சாட்சரம்.

22. சைவசமயிகள் ஆவசியமாக ஓதத்தக்க சிவ ஸ்தோத் திரங்களாவன தேவாரம், திருவாசகம், திரு விசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என் கின்ற அருட்பாக்கள் ஐந்தும்.

23. ஆன்மாக்களுக்குச் சுதந்திரமாகிய அறிவுந் தொழி லும் இல்லை. ஆதலினாலே, சுதந்திரமாகிய அறிவுந் தொழிலும் உடைய சிவபெருமானை நோக்கி "அடியேங்கள் பாவங்களை விலக்கிப் புண்ணியங் களைச் செய்து உம்மை மெய்யன்போடு வழிபட்டு உய்யும்பொருட்டு உம்முடைய திருவருளைப் பொழிந் தருளும்" என்று பிரார்த்தித்து அந்தத் திருவருளை முன்னிட்டு அதன்வழியே ஒழுகல் வேண்டும்.

24. சிவபெருமானை விதிப்படி மெய்யன்போடு வழிபட்ட வர் அவருடைய திருவடிக்கீழ் நித்தியமாகிய பேரின் பத்தை அனுபவிப்பார்.

திருச்சிற்றம்பலம்.

# நற்சிந்தனை

எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீ றணிக
பழுதிலந் தெழுத்தும் பன்னுக பன்முறை
அழுது புலம்புக வாய்விட் டரற்றுக
அன்னை பிதாவின் அடியிணை வணங்குக
தன்னைப் போலச் சகலமும் ஓம்புக
விண்ணைப் போல வியாபகம் ஆகுக
கண்ணைப் போலக் காக்குக அறத்தை
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்க
கையும் மெய்யும் கருத்திற் கிசைக
அழுக்காறு கோபம் அவாஅ ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன்மக்கள் தம்மை
ஒருபோதும் மறவாது உறவு கொள்ளுக
கருவினில் வாராக் காரணங் காண்க
தன்னை அறிக தானே ஆகுக
மின்னை ஒத்த வாழ்வை வெறுக்க
வறுமை வந்துழி மனந்தள ரற்க
மறுமை இன்பம் மறவாது நாடுக
அடியார் தங்கள் அடியிணை மலர்க்கீழ்
குடியாய் வாழுக குறைவெலாந் தீர்க
ஈசன் அடியிணை ஏத்தி ஏத்தி
வாச மலர்கொடு வாழ்த்தி வாழ்த்தி
மத்த னிவனென மண்ணவர் பேசவும்
சித்த னிவனெனத் தேவர்கொண் டாடவும்
இவ்வண்ணம்
ஒத்தன ஒத்தன ஊரவர் பேசிடச்
சித்தந் தெளிந்து சிவாய நமவென
நின்று மிருந்துங் கிடந்தும் நினைந்து
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிந்து
நன்மை தீமை நாடா தொருவி
அன்னை போல அன்பிற் சிறந்து
பின்னை யொன்றும் பேசா தடங்கி
என்றும் வாழ்ந்தினி திருத்தல் இன்பமென்.

— யோக சுவாமிகள்

## திருக்கோயிலிலுந் திருவீதியிலும் செய்யத்தகாத குற்றங்கள்

1: ஸ்நானஞ் செய்யாது போதல்
2: தோய்த்துலராத வேட்டி தரித்துக்கொண்டு போதல்
3. கால் கழுவாது போதல்
4. ஆசௌசத்துடன் போதல்
5. தலையில் வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல்
6. சட்டை போட்டுக்கொள்ளுதல்
7. போர்த்துக்கொள்ளுதல்
8. மேல் வேட்டி போட்டுக்கொள்ளுதல்
9. பாதரட்சை இட்டுக்கொள்ளுதல்
10. வாகனமேறிக்கொள்ளுதல்
11. குடை பிடித்துக்கொள்ளுதல்
12. வெற்றிலை பாக்குண்டல்
13. துப்புதல்
14. மலசலங் கழித்தல்
15. மூக்குநீர் சிந்துதல்
16. மயிர் கோதி முடிதல்
17. சூதாடுதல்
18. சிரித்தல்
19. சண்டையிடுதல்
20. வீண்வார்த்தை பேசுதல்
21. காமப் பற்று வைத்தல்
22. கால் நீட்டிக்கொண்டிருத்தல்
23. சயனித்தல்
24. ஆசனத்திருத்தல்
25. சுவாமிக்கும், பலிபீடத்துக்கும் குறுக்கே போதல்
26. சுவாமிக்கும், பலிபீடத்துக்கும் இடையிலே நமஸ்காரம் பண்ணுதல்
27. சுவாமிக்குக் காலை நீட்டி நமஸ்காரம் பண்ணுதல்
28. சுவாமிக்குக் காலை நீட்டி அங்கப்பிரதக்ஷிணம் பண்ணுதல்
29. நிருமாலியத்தைக் கடத்தல்
30. நிருமாலியத்தை மிதித்தல்
31. தூபி, துசத்தம்பம், பலிபீடம், விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல்
32. விக்கிரகத்தைத் தொடுதல்.

— நாவலர்

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்—605/2-76